வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். STC 1256/2023

வழக்குசாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஆனந்த கிருஷ்ணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 42 |

தேதி 04.03.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிரி நிறுவனம் MYK நிறுவனத்தின் பொருட்களை பெற்றார்கள் என்றால் ஆமாம். மேற்படி MYK நிறுவனத்தின் பொருட்களை பெறுவதற்கு யாரிடம் பர்சேஸ் ஆர்டர் அனுப்பினார்கள் என்றால் என்னிடம் தான். என்னுடைய அசல் மனுவில் எதிரி நிறுவனம் பொருட்களை அனுப்புவதற்கு எந்த தேதியில் என்னிடம் பர்சேஸ் ஆர்டர் செய்தார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி நிறுவனத்தின் மீது புகார் அளித்தேனா என்றால் சோழவரம் காவல் நிலையத்தில் அளித்தேன்.

நான் எதனால் சோழவரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் என்னுடைய நிறுவனம் சோழவரம் காவல் நிலையத்திற்குள் வருகிறது. எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் ஞாபகமில்லை. வழக்கு காசோலையை வங்கியில் தாக்கல் செய்வதற்கு முன்பு அளித்தேனா என்றால் ஞாபகமில்லை. அசல் காசோலையில் உள்ள

எழுத்துக்கள், தேதி யாரால் எழுதப்பட்டது என்றால் என்னால் எதிரி கூறியதன் பேரில் எழுதினேன். காசோலை என்று, எப்போது என்னால் பெறப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

இதே போன்று எதிரி வேறு காசோலை என்னிடம் இருந்த்தா என்றால் இருந்தது. எத்தனை என்றால் இரண்டு. அது என்ன ஆனது என்றால் இரண்டையும் வங்கியில் தாக்கல் செய்து பணம் இல்லை என திருப்ப்ப்பட்ட பின்பு எதிரி என்னிடம் அதில் ஒரு காசோலை பணத்தினை கொடுத்துவிட்டார். மற்றொரு காசோலை தான் இந்த வழக்கு. மேற்படி பணம் கொடுக்கப்பட்ட காசோலை யாரிடம் உள்ளது என்றால் எதிரியிடமே திருப்பி கொடுத்துவிட்டேன்.

இரண்டு காசோலையும் ஒரே தேதியில் கொடுக்கப்பட்டதா என்றால் வேறு வேறு தேதியில் கொடுக்கப்பட்டது. முதல் காசோலை பணம் இல்லை என திருப்பப்படுவதற்கு முன்பு கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். சோழவரத்தில் நான் புகார் அளித்த போது MYK நிறுவனத்தின் ஆட்கள் வந்திருந்தார்களா என்றால் இல்லை. MYK நிறுவனம் தான் சோழவரத்தில் புகார் அளித்த்து என்றால் இல்லை. MYK நிறுவனத்தில் தான் எதிரி பொருட்கள் வாங்கினார் என்றாலும் நான் அந்த நிறுவனத்தின் கலக்ஷன் ஏஜன்ட் என்றால் சரியல்ல. MYK நிறுவனத்தில் பொருள் பாதிப்புக்கு உள்ளான பொருள் என்பது எனக்கு தெரியுமா என்றால் என்னிடம் கூறவில்லை.

எதிரிக்கும் MYK நிறுவனத்திற்கும் பொருளினை பற்றி ஒரு பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. எனவே தான் MYK நிறுவனம் எதிரி நிரப்ப்ப்படாத காசோலையை என்னிடம் அளித்து இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி நிறுவனம் என்னிடம் எந்த பொருளையும் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் MYK நிறுவனத்திடம் தான் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எனவே தான் புகார்தார்ர் நிறுவனத்தின் உரிமையாளருக்கு தெரியாமல் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டபடி

இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**